# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. No. 155 /2022 PW2

12.02.2026 **வா..சா.2 நரேன்பாபு சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

இந்த வழக்கின் 4 கடனுறுதி சீட்டுகளிலும் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஐ தவிர மீதம் உள்ள வா.சா.ஆ.2 முதல் 4 கடனுறுதி சீட்டுகளை எழுதிய நபர் வேறு ஒருவர் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 முதல் 4 கடனுறுதி சீட்டுகள் ஒரே சமயத்தில் எழுதியது போல் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3, 4 கடனுறுதி சீட்டுகளில் வாசகங்கள் ஒரு மையினாலும், மேலே உள்ள எண்ணில் எழுதப்பட்ட தொகை வேறு ஒரு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 கடனுறுதி சீட்டுகளிலும் முதல் கையொப்பம் யார் போட்டது என்றால் நான் போட்டேன். மற்றொரு சாட்சி கையொப்பம் போட்டவர் எனக்கு அறிமுகமானர் என்றால் சரிதான் ஆனால் எனக்கு அவ்வளவாக பழக்கம் கிடையாது. கடனுறுதி சீட்டை எழுதிய முனியன் எனக்கு பழக்கமானவரா என்றால் இல்லை ஆனால் வாதிக்கு அறிமுகமானவர். என்னுடன் சாட்சி கையொப்பம் போட்ட மற்றொரு நபர் வாதிக்கு நல்ல பழக்கமானவர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டின் தொகையையோ மற்ற 3 கடனுறுதி சீட்டின் தொகையையோ நான் எண்ணிப் பார்க்கவில்லை. என்னுடன் இருந்த மற்றொரு சாட்சியோ அல்லது முனியன் என்பவரோ பணத்தை எண்ணினார்களா என்றால் எனக்கு தெரியாது. பணத்தை வீட்டில் இருந்து எடுத்து வந்தாரா அல்லது வங்கியில் இருந்து எடுத்து வந்தாரா என்றால் அதை நான் பார்க்கவில்லை. வாதியிடம் இருந்து இறந்த சத்தியநாராயணமூர்த்தி பணம் வாங்கியதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி 4 கடனுறுதி சீட்டுக்கள் தவிர வேறு எந்த கொடுக்கல் வாங்கலோ வாதிக்கும், இறந்த சத்தியநாராயணமூர்த்திக்கும் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. சத்தியநாராயணமூர்த்தி இறந்தது எனக்கு எப்படி தெரியும் என்றால் செய்தி தாளில் பார்த்து தெரிந்து கொண்டேன். மேற்படி சத்தியநாராயணமூர்த்தி இறப்பிற்கு பிறகு வாதி

சத்தியநாராயணமூர்த்தி வீட்டிற்கு பணத்தை வசூல் செய்யும் பொருட்டு என்னை அழைத்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கு பிரதிவாதி வீட்டிற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. நான் வாதிக்கு நெருக்கமானவர் என்றும், வாதி தயார் செய்த கடனுறுதி சீட்டில் பொய்யாக கையொப்பம் போட்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.